267—

வேளாண் விரிவாக்க மையக் கட்டடம்

***2288—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதியிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

திருவெறும்பூர் தொகுதியிலுள்ள வாழவந்தான்கோட்டையில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம், தேசிய வேளாண்மை வளர்ச்சி வங்கி, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி உதவியுடன் ரூ.150 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 5—9—2017 அன்று திறந்து வைக்கப்பட்டு இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதி, விவசாயிகள் அதிகம் வாழ்கின்ற பகுதி. ஆகவே அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதற்காகத்தான், இந்தக் கேள்வியை நான் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கேட்டேன். அதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2017 ஆம் ஆண்டில் அது தொடங்கிவிட்டதாக இன்றைக்குச் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு இந்தக் கேள்வி அவைக்கு வந்திருக்கிறது.*

இந்தக் கேள்வி, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும்கூட நான் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து ஒன்றை அறிய விரும்புகிறேன். ஏறத்தாழ 5,000—க்கும் மேற்பட்ட விவசாயிகள் காப்பீட்டுத் தொகை கட்டியுள்ளனர். அரசிடமிருந்து வந்த இழப்பீடு, இதுவரை 2,000 அல்லது 3,000 விவசாயிகளுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,000 விவசாயிகளுக்கும் அரசு

இழப்பீடு தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலமும் தராத அளவிற்கு, தமிழகத்தில் 3,450 கோடி ரூபாய் காப்பீடு தொகையாகப் பெற்று வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் சில மாவட்டங்களில் சில கணக்கு வழக்கு பிரச்சினைகளில் வேளாண்மைத் துறை, புள்ளியியல் துறை மற்றும் காப்பீட்டுக் கழகம் ஆகியவை இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளதால், அப்பிரச்சினை தீர்ந்தவுடன், கூடிய விரைவில் அனைவருக்கும் அத்தொகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும், அந்தக் கேள்வியைச் சுற்றியே கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் கேட்கிறேன். வாழவந்தான்கோட்டை உள்புறமாக இருப்பதால், அங்கு பேருந்து வசதியை அரசு ஏற்பாடு செய்து தருமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழவந்தான்கோட்டையில் வேளாண்மை விரிவாக்க மையம் இன்றைக்கு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு தரமான விதைகள் மற்றும் இடுபொருட்களை உரிய நேரத்தில் விநியோகம் செய்வதற்காகவும், தகவல் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் மொத்தம் 153 வேளாண்மை விரிவாக்க மையங்களும், 497 துணை*

2018 ஜூலை 4]

வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு வருகின்றன. திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 14 வேளாண்மை விரிவாக்க மையங்களும், 10 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவ்வலுவலகத்தில் வேளாண் துறையுடன் அதன் சகோதரத் துறைகளான தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகம் மற்றும் விதை விற்பனைத் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று போன்ற வேளாண் சார்ந்த அனைத்துத் துறைகளின் விரிவாக்க சேவைகளையும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு வழங்கும்வகையில், அனைத்துத் துறை அலுவலர்களும் ஒரே இடத்தில் வருவதற்கு ஏற்ப, வாழவந்தான்கோட்டையில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. (குறுக்கீடு)

மேலும், திருவெறும்பூர் வட்டாரத்தில் கல்கொண்டார்கோட்டையில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் இயங்கி வருகிறது. எனவே, திருவெறும்பூர் வட்டாரத்திலுள்ள விவசாயிகளுக்குத் தேவையான சேவைகள் அனைத்தும் எவ்விதக் குறைபாடுமின்றி வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துத் துறை சம்பந்தமாகக் கேட்ட கேள்விக்கு அத்துறையினுடைய அமைச்சர் அவர்களைத் தொடர்பு கொண்டு அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே நாங்கள் இதுகுறித்து பலமுறை இந்த அவையில் கேட்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் இருக்கின்ற நாகப்பட்டினம் மற்றும் திண்டுக்கல் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் பலன்கள் விவசாயிகளுக்கு முழுமையாக வந்து சேரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விரைவாக வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.*

அதேபோல, தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்தில்தான் இருக்கிறது. அந்தக் காய்கறி மார்க்கெட்டில் குளிர்சாதனக் கிடங்கு போதுமானதாக இல்லை. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காத நேரத்தில், அவற்றைச் சேமித்து வைப்பதற்கு ஒரு குளிர்சாதனக் கிடங்கை ஏற்படுத்தித் தர வேண்டும். அங்கு போதுமான நிலம், அதாவது 18 ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, 100 டன் கொள்ளளவு கொண்ட குளிர்சாதனக் கிடங்கு ஒன்றை அங்கே அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களின் கோரிக்கையை ஏற்று அங்கு விரைவில் குளிர்சாதனக் கிடங்கை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அவருடைய மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பயிர்க் காப்பீட்டுத் தொகை அனைத்தும் விரைவில் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

268—

தனி வட்டாட்சியர்

***22453—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—